## புதிய மின் இணைப்பு பெறுதல் தொடர்பான அறிவுரை

1. ஒரு வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வணிகம் / தொழில் செய்கின்றவர்கள் புதிய மின்சார சேவை இணைப்புக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

2. விண்ணப்பதாரரின் அடையாளத்தை சரிபார்க்க, விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையின் (என்.ஐ.சி) பிரதியை வழங்குவது கட்டாயமாகும்.
   தேசிய அடையாள அட்டை (என்.ஐ.சி) இல்லை எனின், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) அல்லது ஓட்டுநர் உரிமத்தின் (driving license) பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பதாரரின் உரிமையை அல்லது குடியிருப்பை சரிபார்க்க, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை முன்வைப்பது போதுமானது.
   - 3.1. விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட வளாகத்தின் சட்டபூர்வமான உரிமையாளராக இருந்தால், வளாகத்தின் உறுதிப் பத்திரம்.
   - 3.2. விண்ணப்பதாரர் ஒரு குடியிருப்பாளர், குத்தகைதாரர் அல்லது வாடகைக்கு இருப்பவர் என்றால், குத்தகை ஒப்பந்தம் அல்லது வாடகை ஒப்பந்தம்.
   - 3.3. உரிமையாளர் தொடர்புடைய உள்ளூர் அதிகாரத்தால் வழங்கப்பட்ட இணக்க சான்றிதழ் (COC).
   - 3.4. உரிமையாளர் தொடர்புடைய உள்ளூர் அதிகாரசபையால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிவிப்பு.
   - 3.5. மின்சார இணைப்பு கோரப்பட்ட வளாகத்தின் முகவரியைக் கொண்ட தேசிய அடையாள அட்டை (என்.ஐ.சி).
   - 3.6. மின்சார இணைப்பு கோரப்பட்ட விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிக்கும் ஏனைய பயன்பாட்டு விலைப்பட்டியல் (இறுதி 3 மாதங்களுக்கான)
   - 3.7. தேர்தல் பதிவேட்டில், விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் சம்பந்தப்பட்ட வளாக முகவரியைக் குறிக்கும் சான்றிதழ்.
   - 3.8. வளாகத்தின் உரிமையை அல்லது வதிவிடத்தை நிரூபிக்க வேறு எந்த ஆவணமும்.

4. வயரிங் தரத்தின்படி உள்ளக வயரிங் முடிக்கப்பட வேண்டும். நிறுவுகை பிரமாணங்களுக்கேற்ப வயரிங் இருந்தால் மட்டுமே மின்சாரம் வழங்கப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் மின் சேவை வழங்கும் கம்பியை மூன்றாம் தரப்பினர் ஒருவருக்குச் சொந்தமான காணிக்கு மேலாக எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றால், விண்ணப்பதாரர் அத்தகைய நிலங்களின் உரிமையாளர்களிடமிருந்தோ அல்லது குடியிருப்பாளர்களிடமிருந்தோ சரியான மின் மார்க்க பாதை அனுமதிப் படிவத்தை (இணைப்பு 3) பூர்த்தி செய்வதன் மூலம் பெற வேண்டும். (ஒன்றுக்கு மேற்பட்டவை தேவைப்பட்டால் இணைப்பு 3 இன் பிரதிகளைப் பயன்படுத்தவும்).

6. மூன்று படி நிறுவுகை இணைப்புகளுக்கும், ஒரு படி நிறுவுகை இணைப்புகளுக்கும் பாதுகாப்பு தேவைகளுக்காக இலங்கை மின்சார சபையினால் அறிவிக்கப்படுமிடத்து, சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையுடன் பதிவுசெய்த ஒரு பட்டய மின் பொறியியலாளர் வழங்கிய இணக்க சோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவுசெய்யப்பட்ட பட்டய மின் பொறியியலாளர்களின் பட்டியலை அந்தந்த நுகர்வோர் சேவை மையம் அல்லது பிரதம / மின் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

7. மின்மானி வாசிப்பு மாதாந்த அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும் என்பதால், உங்களுக்கும் CEB இன் ஊழியர்களுக்கும் வசதியாக, இணைப்பு 4 இல் காட்டப்பட்டுள்ளவாறு மின்மானியை (மீற்றரை) எல்லைச் சுவரில் அல்லது வாயிலுக்கு அருகில் பொருத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

8. தரை மட்டத்திற்கும் மின்மானி இருப்பிடத்திற்கும் இடையிலான அனுமதிக்கப்பட்ட உயரம் 1 ½ மீற்றராக இருக்க வேண்டும். அது எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். மற்றும் மழை / சூரிய ஒளி அல்லது வேறு எந்த ஈரமான நிலைமைகளுக்கும் ஆளாகக்கூடாது.

9. சேவை கம்பி, (இணைப்பு 5) தரை மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 3.7 மீற்றர் உயரத்தை வைத்திருக்க ‘‘எல்’’ இரும்பு நிறுவப்பட வேண்டும். இந்த ஏற்பாடு சாத்தியமில்லாத வளாகங்களுக்கு, CEB (இணைப்பு 6) பரிந்துரைத்தவாறு மாற்று நிறுவல் முறையைப் பின்பற்றலாம்.

10. மின் கம்பியின் பாதையை தடை செய்யும் மரங்கள் மற்றும் மரத்தின்பகுதிகள் விண்ணப்பதாரரால் வெட்டி அகற்றப்படல் வேண்டும். இணைப்பு வழங்கப்பட்டவுடன், சேவை கம்பியை மரங்கள் மற்றும் மரத்தின் பகுதிகள் தடை செய்யாதவாறு வைத்திருப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். மரங்கள் மற்றும் மரத்தின்பகுதிகள் CEB ஆல் வெட்டப்பட்டால், வாடிக்கையாளர் அதற்கான செலவுகளை ஏற்க வேண்டும்.

11. மின்வழங்கல் நிறுத்தப்படும் வரை பாதுகாப்பு வைப்புத்தொகையின் மூலப் பிரதியை (Original P.I.V) பாதுகாப்பான நிலையில் வைத்திருக்க வாடிக்கையாளர்கள் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இணைப்பு துண்டிப்பு அல்லது பெயர் மாற்றம் செய்யும் போது மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுமிடத்து, நிலுவைத் தொகைக்கு மேலதிகமாகவுள்ள பாதுகாப்பு வைப்புத்தொகை மீண்டும் வழங்கப்படும்.

12. சேவை இணைப்பு மற்றும் பாதுகாப்பு வைப்புக்கான மதிப்பிடப்பட்ட தொகையை செலுத்திய பின்னர் வாடிக்கையாளர் வேறு எந்த கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. இந்த

சேவை இணைப்பை வழங்க தேவையான அனைத்து பொருட்களும் வேலைகளும் இலங்கை மின்சார சபையினால் ஏற்கப்படும் என்பது உங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

13. மதிப்பீட்டு தொகை மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகை செலுத்தப்பட்ட பின்னர் ஏதாயினும் கட்டண திருத்தம் இருப்பின் சம்பந்தப்பட்ட தலைமை / மின் பொறியியலாளர் மட்டுமே அதற்கான எழுத்து பூர்வ அறிவிப்பை வெளியிடுவார்.